T-UN-525
1690

உ
சிவமயம்

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய
சின்னம்பேடு என்கிற சிறுவாபுரித் தலத்
திருப்புகழ்கள்

(மூலமும் உரையும்)

*

உரையாசிரியர்
நல் முருகேச முதலியார்

*

அணிந்துரை :
திரு யு. சுப்ரமணியன், I.A.S.
ஆணையாளர்
தமிழ்நாடு அறநிலையத்துறை

*

அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
சின்னம்பேடு, பொன்னேரி வட்டம்
செங்கல்பட்டு மாவட்டம்
வெளியீடு.

*

1980

[உரிமை பதிப்பு]

முதற் பதிப்பு: செப்டம்பர் 1980
பிரதிகள் 1000

© உரையாசிரியர்: நல். முருகேச முதலியார்

வெளியீடு:
அருள்மிகு சின்னம்பேடு
பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

விலை ரூ.

அச்சிட்டோர்: சோஷியல் பிரிண்டர்ஸ்
130, தங்கசாலை தெரு, சென்னை-1

கிடைக்குமிடம்:
1. அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி
சின்னம்பேடு திருக்கோயில் நிர்வாகி
சின்னம்பேடு P.O., பொன்னேரி வட்டம்
செங்கை மாவட்டம்.

2. புத்தக விற்பனையாளர்கள்.

உ

சிவமயம்

உரையாசிரியர் முன்னுரை

(சித்தாந்தச் செம்மல் இராவ்சாகிப் நல். முருகேச முதலியார்)

தொண்டைமண்டல நன்னாட்டில் சாலக்கோயில்கள் உள. அதில் ஆரணியாறும், குடத்தலையாறும் சூழப்பெற்ற புலியூர் பையூர் கோட்டங்கள் சிறந்தவை. முன்னொருகால் சிவபெருமானின் ஆஞ்ஞையால் தென்னாடு அனுப்பப்பட்ட அகத்திய முனிவருக்கு தனது பார்வதி கல்யாண கோலத்தைக் காட்டிய பெருமையுடையதும், அம் முனிபுங்கவர் பஞ்ச இஷ்டிகளை (யஞ்ஞங்களை) உலகம் உய்யச் செய்து முடித்ததுமான நாடு. ஈண்டு சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் உகந்த தலங்கள் பல உள. முருகப்பெருமான் தலங்களும் உள்ளன. திருவொற்றியூருக்கும் திருக்காளத்திக்கும் நடு நாயகமாக உள்ளது இப்பிரதேசம். சோழர் காலத்துக் கோயில்களும் பலவுள. பொன்னேரியிலுள்ள ஸ்ரீ கரிகிருஷ்ண பெருமாள் கோயில், அகத்தீசுவரர் கோயில், திருப்பாலைவனத்திலுள்ள திருப்பாலீசுவரர் கோயில், மேலூரில் உள்ள இடையுடைய அம்பாள் கோயில், ஆண்டார்குப்பத்தில் உள்ள பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் பிரசித்தம். புதுவாயலுக்கடுத்த சின்னம்பேடு என்ற கிராமத்திலுள்ள ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி கோயிலைச் சிலர் அறிந்திருக்கமாட்டார்கள். மேற்கூறிய இரண்டு முருகன் கோயில்களும் ஸ்ரீ அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பெற்றவை. ஆனால் சின்னம்பேடு கோயில் பலவாண்டுகளாகச் சிலமாகக் கிடந்து, கிராமத்து நன்மக்கள் சொந்த முயற்சியால் இப்போது புனருத்தாரணம் செய்யப்பட்டும், நூதன இராஜகோபுரம் கட்டப்பட்டும் காளயுக்தி ஆண்டு ஆனித் திங்கள் 5-ம் நாள் (19—6—1978) ஆகம விதிப்படி சம்பிரமமாக கும்பாபிஷேகம் பக்தர்கள் மகிழ நடைபெற்றது. அதைத்தொடர்ந்து இந்த தலத்தின் திருப்புகழ்ப்பாக்களை உரையுடன் இந்நூலில் பதிப்பிக்கப்படுகிறது.

தலமகிமை

சின்னம்பேடு, செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி தாலுக்காவில் நெ. 127 வது கிராமம், சிறுவரம்பேடு † என்பது மருவி 'சின்னம்பேடு' என்று ஆயிற்று. இது சென்னையிலிருந்து சுமார் 25 கல் தொலைவில் உள்ளது சென்னையிலிருந்து போகும் பெரியபாளையம் — ஆரணி பஸ் மார்க்கத்தில் அகரம் என்ற இடத்தில் இறங்கி சுமார் 2 கல் தொலைவில் நல்ல ரஸ்தா மூலம்

† சிறுவை, சிறுவாபுரி என்ற பேர்களும் திருப்புகழில் காணப்படும். முழுப்பெயர் சிறுவர் இருவர் அம்பெடுத்த ஊர் என்பதாகும். அது மருவி சிறுவரம்பேடு என்ற பேரும் வழக்கிலுண்டு.

அடையக்கூடியது.† இந்த கிராமத்துக்கு அடுத்தது நல்லூர். இங்கும் சிவன் கோயில் உள்ளது. இரண்டு கிராமங்களும் பழையனூர் ஆலங்காடு போல் இணைந்த சிறப்பும் தொடர்ந்த நற்குடிமக்களும் வாழுமிடமாகும். நல்லூரில் அருள்மிகு ஆனந்த வல்லி உடனுகிய திருவிளங்கீஸ்வரர் கோயில் உள்ளது. சிறுவை யில் திருவூரகப்பெருமாள் கோயிலும், ஷை பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலும் உள. வைணவ சிறு கோயில் ஒன்றும், ஜைன பார்சுவநாதர் (23-வது தீர்த்தங்கரர்) சிறு கோயிலும் உள. சிறுவையிலுள்ள அருள்மிகு அகஸ்தீசுவரர் கோயில் புராதனமானது. தற்போது சிறிது இலமாக இருக்கிறது.

முருகன் கோயில் அமைப்பும் மூர்த்தியின் பெருமையும்

இப்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு விளங்கும் கோயிலில் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் மூலத்தானத்தில் உள்ள கடவுளாகும். பக்கலில் அருணசலீசுவரரும் உண்ணுமுலையம்மையாரும் கோயில் கொண்டுள்ளார்கள். வெளிப்பிராகாரத்தில் ஆதி விநாயகர், நாகலிங்கேசுவரர், சூரியன், பைரவர் முதலிய பரிவார மூர்த்திகளும் உளர். மூலத்தானத்திலுள்ள முருகப்பெருமான் அபயகரமும், தொடையின்மீது ஒரு கரமும் வைத்து திருமுகம் கருணை பொழிய காட்சியளிக்கிறர். துவஜஸ்தம்பத்திற்குப்பின் அழகிய மயில் எதிர்நோக்கியுள்ளது. கோயிலுக்குப் பின்புறம் பெரிய தாமரைக்குளம் உள்ளது. கோயிலமைப்பும், ஊரும் முற்காலத்தில் அருணகிரியாரால் பாடப்பட்டதுபோல் மிக சிறப்புள்ளதாக இருந்திருக்கவேண்டும். இப்போது புண்ணிய வசத்தால் கோயில் புதுப்பிக்கப்பட்டு ஐந்து நிலை இராஜ கோபுரமும் கட்டப்பட்டு எழிலுடன் காட்சியளிக்கிறது. எனவே தலம், மூர்த்தி, தீர்த்தம் என்ற மூன்றும் கூடிய இந்த திருக்கோயில் சிறந்து விளங்குகிறது. உத்சவ மூர்த்திகளும உள்ளன.

புராண வரலாறு

இத்தலத்தில் ஸ்ரீ இராமபிரான் இராவண சம்மாரத்தின் பின் அசுவமேதயாகத்தில் விடப்பட்ட குதிரை இவ்விடத்தில் வந்து தடைபட, ஸ்ரீ இராமர் எதிர்த்துவந்து, தனது புத்திரர்களான லவ குசர்கள் இதற்குக் காரணம் என்று அறிந்தார். லவ குசர்கள் அம்பெடுத்து சமராடி இராமரை வென்றூர்கள் என்று உத்தரராமாயணத்திலுள்ள வரலாற்றை ஸ்ரீ அருணகிரியார் தனது திருப்புகழில் பின்வருமாறு பாடியுள்ளார்:-

சிறுவ ராகி யிருவ ரந்த கரிப தாதி கொடுபொ ருஞ்சொல
சிலையி ராம னுடனெ திர்த்து சமராடி
செயம தான நகர மர்ந்த அளகை போல வளமி குந்த
சிறுவை மேவி வரமி குந்த பெருமாளே!

---

† சாலையை பஞ்சாயத்து போர்டு அல்லது அரசாங்கம் அகலப்படுத்தினல், பஸ் சின்னம்பேடுக்குள் நுழைந்துபோகும் வாய்ப்பு நேரிடும். ஷை கிராமத்தை அடைய டிரங்கு ரோட்டில் பனங்காட்டூர் சந்திப்பில் இறங்கி சாலை வழியும் போகலாம். சுமார் 3/4 மைல் சேரும்.

மேலும் ஒரு திருப்புகழில், இத்தலத்து திருமாலின் பெயர் திருவூரகப் பெருமாள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலில் நின்றுல கோர்நிலை யேபெற
மாநி லங்கனெ லாநிலை யேதரு
ஆயனங் திருவூரக† மால் திரு மருகோனே!

ஸ்ரீ அருணகிரியாரின் தலத்திருப்புகழ்

அனுபூதிமான் அருணகிரியாரின் திருப்புகழ் மந்திரமொழி யாகும். அதை ஓதி வழிபடுவோர் திருமுருகனின் அருளுக்குப் பாத்திரமாவார்கள். இகபர சௌபாக்கியம் பெறுவர் திருப்புகழ் பரகதிக்கு ஓர் ஏணி, அருட்கடலுக்கு ஏற்றம் மனத்தளர்ச்சிக்கு ஆணி, பிறவிக்கு ஓர் அரம் என்று பெரியோர்கள் சான்று கூறியுள்ளார்கள். எனவே இத்திருப்புகழ்களை நாவால் ஓதி மனதில் சிந்திப்பது நல்லது.

கோயில் வழிபாடு

கலியுக வரதனும் முருகப் பெருமானின் ஆலயம் தொழுவது சாலவும் நன்று. அந்த வழிபாட்டில் அனுபூதிமான்களின் அருட்பாடல்களை ஓதுவது மிகவும் பலன் தரும அருணகிரியார் நமது பால குமார சுவாமியை ஆகம சொரூபா, ஞானமனோலயா என்றும், போதகமாமறை ஞானதயாகரர் என்றும் பாடிப் பரவுகிறார். அவர் நாவில் வந்த புகழை நம் புன் நாவிலும் ஏற்றிப் புகழ்தல் நல்லார் கடனாகும்.

நித்திய நைமித்தியங்கள்

பல ஆண்டுகளாக ஜீரணப்பட்டுத் தற்போது பல தொண்டர்கள் தளராது, பணமும் பொருளும உழைப்புமதந்து புதுப்பித்த இக்கோயிலில் எழுந்தருளிய பெருமானின் திருவருள் பிரகாசிக்க, மேலும் செய்ய வேண்டியவைகள் பலவுள நித்திய நைமித்தியங்கள் முறை தவறாது, நெறி பிறழாது நடைபெறின் தலத்தின் மூர்த்தண்யம் பெருகும். முருகப்பெருமானுக்கு உகந்த நாட்கள், வெள்ளி, செவ்வாய், விசாகம், சஷ்டி, கிருத்திகை நாட்களாகும். முக்கியமாக பிரதி கிருத்திகையிலும் திரளான பக்தர்கள் பால் காவடி, புஷ்பக்காவடி எடுக்க வேண்டும். பஞ்சாமிர்த விபூதி, அபிடேக அலங்கார ஆராதனைகள் செய்ய வேண்டும். குழந்தைகளுக்கு காது குத்துதல், முடியிறக்குதல் செய்வதற்கு இது உகந்த இடமாக வேண்டும். பிரபல பிரார்த்தனை தலமாக ஆக்கவேண்டும். இவைகட்கு முதலில் சிந்தனையும், சிரத்தையும் கொள்ளவேண்டும் முருகன் அருளால் சிரமமின்றி மற்றவை தானே சித்திபெறும். இதற்கு அடியார்கள் இடைவிடாது பாடுபட வேண்டும். நிர்வாகமும் நன்கு அமைய

---

† திருவூரகப்பெருமான் என்பது காஞ்சியிலுள்ள உலகளந்த பெருமாளின் திருநாம மாகும். சின்னம்பேட்டிலுள்ள பெருமாள் தீண்டாத்திருமேனி. லவ குசர்கள் ஈண்டு பரண் இருந்தார்கள்.

வேண்டும். முருகப்பெருமானுக்கும், பக்கலில் உள்ள ஸ்ரீ அருணாசலேசுரர், உண்ணாமுலை அம்மைக்கும் கவசம, திருவாபரணங்கள் செய்து சமர்ப்பிக்கவேண்டும்.

இந்நூலின் நோக்கம்

சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுதல் மிக்க பலனுடையதாகையால், ஸ்ரீ அருணகிரியார் வாக்குக்கு வாச்சியமாகிய முருகப்பெருமானின் அருள் விலாசத்தை சிறிது உணர அடியார்கட்கு உதவியாக தலத் திருப்புகழ்களுக்கு இந்த சிற்றுரை எழுதப் பட்டுளது, எங்கள் குடும்பத்தின் பூர்வீக கிராமம் நல்லூர். அது மட்டுமன்றி சிறுவரம்பேடு திருப்பணி செய்த தொண்டர்கட்கு ஆதிமுதல் ஒரு சிறு துரும்பளவில் உறுதுணையாய் நின்று, அந்த நற்பணி பூர்த்தியாகிக் கும்பாபிடேகம் செய்யப்பெற்ற நாளில் ஸ்ரீ பாலகுமார சுவாமியின் திருவுருவத்தைக் கண்ணாரக்கண்டு அடியேன் தரிசித்து ஆனந்தமடையுங்கால் "நமோ நம", "சரணம் சரணம" என்று சொல்வதனறிப் பாடவல்லேனாகையால், இந்த உரையை அன்பர்கள விரும்பிய வண்ணம் எனது சிற்றறிவுக்கு எட்டிய அளவு எழுதித்தந்துள்ளேன். வெளியீடுக்கு பொருள் சிக்கனம் கருதி சிறிய அளவில் உரை எழுதியுள்ளேன் நல்லுலகம் இதிலுள்ள குற்றங் களைந்து குணம் கொண்டு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமியின் அருளுக்கு பாத்திரராகும்படிக்கு வேண்டுகிறேன். முருகன் திருவருளால் நல்லூரிலும், சிறுவரம்பேட்டிலுமுள்ள சிவன் திருக்கோயில்கள் திருப்பணியும் சக்தியானுசாரம் காலக்கிரமத்தில் மேற்கொள்ளப்பட்டு இனிது நிறைவேற, யான் வணங்கும் தெய்வத்தைப் பிரார்த்திக்கிறேன்.

நன்றி அறிவிப்பும் வேண்டுகோளும்

இந்நூலை அச்சேற்றி வெளியிடுவதற்குத் தக்க உதவிபுரிந்த எனது அரிய நண்பர், நற்பணி பலவாற்றும் அறநிலைய ஆணையாளர் திரு யு. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்., அவர்கட்கு எனது நன்றி உரித்தாகுக.

கோயில் நிர்வாகிகள் இந்நூலின் பிரதிகளைப் பக்தர்களும், யாத்ரிகர்களும், பொது மக்களும் நூல் நிலையங்களும் தட்டுத் தாமதமின்றிப் பெறுவதற்கு தக்க ஒழுங்கும் முயற்சியும் எடுத்துதவுமாறு வேண்டுகிறேன். அவர்கட்கும் எனது நன்றி,

இத் திருப்புகழ்களைப் படித்து, பாடி, சிந்தித்துப் பக்தி செலுத்துவோர் நல் யாக்கையும், நீள் ஆயுளும், இகபர சௌபாக்கியங்களையும் முருகப்பெருமான் அருளிருந்தவண்ணம் பெறுவார்கள். இது சத்தியம்.

"அரசடி கற்பகம்"
சென்னை - 17
27—9—1980

நல். முருகேச முதலியார்

அணிந்துரை

திரு யு. சுப்ரமணியன், ஐ. ஏ. எஸ்.

ஆணையாளர்,

அறநிலையத்துறை, சென்னை-34

தொண்டைநாட்டு செங்கை மாவட்டத்து பொன்னேரிக்கு அருகில், புதுவாயல் என்னும் ஊரை அடுத்து, சின்னம்பேடு என்னும் கிராமம் உள்ளது. 'சின்னம்பேடு' என்னும் பெயர் 'சிறுவரம்பேடு' என்பதன் திரிபுஆகும். இராமபிரானின் புதல்வர்களாகிய லவன், குசன் என்னும் சிறுவர்கள், அம்பு எடுத்துப் போர்செய்த இடம் ஆதலால், இவ்வூருக்குச் சிறுவரம்பேடு என்னும் பெயர் அமைந்தது. அப்பெயரே மருவி, இக்காலத்தில் சின்னம்பேடு என வழங்குகின்றது,

சின்னம்பேடு என்னும் இக்கிராமத்தில், அருள்மிகு பால சுப்பிரமணிய சுவாமி என்னும் முருகன் கோயில் உள்ளது. இக்கோயில் மிகவும் பழமையானது. 600 ஆண்டுகளுக்கு முன் பிருந்த ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள், தமது திருப்புகழில் நான்கு பாடல்களால், இக்கோயிலைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

இத் தலத்திற்கு ஸ்ரீ அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாடல்களுக்கு சித்தாந்தச்செம்மல், இராவ்சாகிப் நல். முருகேச முதலியார் அவர்கள், எளிய இனிய தெளிவான பொருள் விளக்கம் எழுதி உதவியிருப்பதும், அதனைச் சிறுவரம்பேடு அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அன்பர்கள் அச்சிட்டு வெளியிடுவதும், நல்ல பயன்மிக்க செயலாகும். உரை எழுதி உதவிய திரு நல். முருகேச முதலியார் அவர்களுக்கு, அன்பர்களின் நன்றி பெரிதும் உரியதாகும். அன்னாரின் சிறப்பு மிக்க சமயத்தொண்டு தமிழக மக்கள் அறிந்ததே. முருகன் அடியார்கள், இந்நூலை வாங்கிப்படித்துப் பயன்பெறுவார்களாக!

சென்னை-34 — யு. சுப்ரமணியன்,

27—9—1980 — ஆணையர்.

உ
சிவமயம்

ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய சின்னம்பேடு என்கிற சிறுவாபுரி திருப்புகழ்கள்

(1)

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ் மீற வருளாலே
அந்தரியொ டுடனாடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு மகிழ்வாக

மண்டலமு முநிவோரு மெண்டிசையி லுளபேரு
மஞ்சினனு மயனாரு மெதிர்காண
மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
மைந்துமயி லுடனாடி வரவேணும்!

புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாள
புந்திநிறை யறிவாள வுயர்தோளா,
பொங்குகட லுடனாகம் விண்டுவரை யிகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு வடிவேலா!

தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூ
தண்டமிழின் மிகுநேய முருகேசா
சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான
தண் சிறுவை தனில்மேவு பெருமாளே!

(உரை)

சந்தம்: தந்ததன தனதான தந்ததன தனதான
தந்ததன தனதான தனதான

பாடக்கூடிய ராகம்: சஹானா

பிரார்த்தனை: முருகா! நின் தரிசனம் பெற நற்பதம் அருள்வாயே!

அரும்பதவுரை: அண்டர்—தேவர், அந்தரி—காளி, ஐங்கரன்—விநாயகன், மஞ்சினன்—இந்திரன், மைந்து—வலிமை பொருந்திய, நாகம்—மலை. கடல். நாகம்—கிரௌஞ்சமலை, தரளம்—முத்து, புண்டரிகம்—தாமரை,

பொழிப்புரை: தேவர்கள் தலைவனான இந்திரன் மீண்டும் தேவலோகத்தில் குடியேறி ஆளவும் அசுரர் கூட்டம் மாளவும், தேவர்கள் மிக்க மகிழ்ச்சி அடையவும், சூரபன்மனை வென்று அருளவும் அவதரித்தவனே!

காளியுடன் ஆடி வென்ற சங்கரனார் மகிழ்ச்சி மிகக் கொள்ளவும், விநாயகனும அம்மை உமையவளும் களிப் பெய்தவும்,

பூமண்டலத்தவரும், முனிவர்களும், எட்டுத்திசையிலுள்ள யாவரும, சிறைமீட்கப்பட்ட இந்திரனும், பிரம்மாவும் எதிர் காண வணங்கவும்,

இலக்குமியுடன் திருமாலும் இன்பமுற்று தம் மகிழ்ச்சியை எடுத்துக்கூற, வலிமையுடைய மயில்மீது ஆடி அடியேன் முன் வந்தருளவேணும்! –

தாமரையை ஒத்த கண்களையுடைய அருளாள! தேவர் மகளான தேவகுஞ்சரியின் நாயகனே! என் புத்தியில் நிறைந்து நிற்கும் ஞானசிகாமணியே! உயர்ந்த புயங்களை யுடையவனே!

பொங்கிய கடலில் கிரௌஞ்சகிரி பிளவுபட்டு, வலிமை சாடப்பட பொற்சுடர் வீசும் கூரிய வேலாயுதத்தை விடுத்தவனே!

குளிர்ந்த முத்துமாலை அணிந்த அழகிய மார்பனே! செம் பொன் பிரகாசம பொருந்திய திருமேனியனே! தண் தமிழ்ப் பிரியனே! முருகேசன் (இளமை அழகன்) என்ற பெயர் கொண்டவனே!

எப்போதும் அடியார்களின் மனதில் குடிகொள்பவனே! குளிர்ந்த சிறுவை என்னும் இத்தலத்தில் வீற்றிருக்கும் பெருமாளே! (மயிலுடன் ஆடி, மயில் மீது அடியேனையும் காக்க வரவேணும்!)

குறிப்புரை : சூரபன்மன் கொடுமையால் இந்திரன் தேவ லோகம் துறந்து சீகாழியில் மூங்கிலில் ஒளித்துக்கொண்ட கந்தபுராண வரலாறு ஈண்டு கூறப்பட்டுள்ளது. முருகக்கடவுள் சூரபன்மனை அருளால் அடக்கினமையால் இந்திரலோகம் மட்டு மன்றி எல்லாப் பிரபஞ்சங்களும் பயம் தீர்ந்தன. சுரர்களுடன் முனிவர்களும் மகிழ்ச்சி எய்தினர். தேவர்கள் தம்மைக் காப்பாற் றியதற்குக் கைம்மாருக இந்திரன் மகளான தேவகுஞ்சரியை முருகப்பெருமானுக்கு மணம் செய்வித்தார்கள் எப்படி சிவபெரு மான் அடியார்க்கு அருள் பாலிக்கும போது உமைபங்களுய் விடைமீது வருவானே. அதுபோல் தேவியுடன் மயிலுடனடி வரவேண்டும் என்று ஸ்ரீ அருணகிரிநாதர் முருகக் கடவுளை வேண்டுகிருர். அப்படி நாமும் வேண்டுதல் செய்தல் நல்லது. சிறுவாபுரியில் உள்ள பெருமான் நல்ல பெருமாள், நம்மையும் ஆள்வர்

(2)

சீதள வாரிஜ பாதா நமோநம
நாரத கீதவி நோதா நமோநம
சேவல மாமயில் ப்ரீதா நமோநம மறைதேடுஞ்

சேகர மானப்ர தாபா நமோநம
ஆகம சாரசொ ரூபா நமோநம
தேவர்கள் சேனை மகீபா நமோநம கதிர் தோயப்,

பாதக நீவுகு டாராந மோநம
மாவசு ரேசக டோராந மோநம
பாரினி லேஜய வீராந மோநம மலைமாது
பார்வதி யாள்தரு பாலாந மோநம
நாவல ஞானம னோலாந மோநம
பாலகு மாரசு வாமிந மோநம அருள்தாராய்

போதக மாமுக னேரான சோதர
நீறணி வேணியர் நேயாப்ர பாகர
பூமக ளார்மரு கேசாம கோததி யிகல்சூரா!
போதக மாமறை ஞானத யாகர
தேனவிழ் நீபந றுவாரு மார்பக
பூரண மாமதி போலாறு மாமுக முருகோனே!

மாதவர் தேவர்க ளோடே முராரியு
மாமலர் மீதுறை வேதாவு மேபுகழ்
மாநில மேழினு மேலான நாயக வடிவேலா!
வானவ ரூரினும் வீறுகி வீறள
காபுரி வாழ்வினு மேலாக வேதிரு
வாழ்சிறு வாபுரி வாழ்வேசு ராதிபர் பெருமாளே!

(உரை)

சந்தம் : தானன தானன தாந தனதன
தானன தானன தாந தனதன
தானன தானன தாந தனதன

பாடக்கூடிய ராகம் : நாதநாமக்கிரியை

பிரார்த்தனை : முருகா! அடியேனது மனதில் நீ இருக்க வரம் தரவேண்டும்.

அரும்பதவுரை : வாரிஜம்—தாமரை, சேகரம்—அழகு, ஆகமம்—சிவபிரானே வெளிப்படுத்திய வாக்கு (உமைக்கு உபதேசித்தது.) வேதம்-இறைவன் இருடிகள் மூலம் வெளிப் படுத்தியது, மகிபன் — அரசன், குடாரம் — கோடாலி, கடோரன்—அஞ்சுதலைச் செய்யவல்லவன், மனோலா—மனதில் வியாபித்திருப்பவன், போதகம்—யானை, போதக மாமறை— வேதாகம உபநிஷதங்கள், முராரி—முரன் என்ற இராக்க தனை வென்ற திருமால், வேதா—பிரமன்.

பொழிப்புரை : குளிர்ந்த உனது திருவடித் தாமரைகளை வந்திக்கிறேன், வணங்குகிறேன். நாரத முனிவரின் தும்புரு பாட்டில் ரசிக்கிறவனே சேவல் கொடியோனே! சிறந்த மயில் வாகனத்தில் பிரீதி உடையவனே!

வேதங்கள் தேட அதற்கு அப்பாலாய் உள்ள கீர்த்தியை உடையவனே! வணங்குகின்றேன். ஆகமங்களின் உட்பொருளைச் சொரூபமாகக் கொண்டவனே! வணங்குகின்றேன். தேவர்கள் சேனைக்குத் தலைவனே! வணங்குகின்றேன்.

நற்கதியை அடையப் பாதகத்தை விலக்கும் கோடாலி போன்றவனே! வணங்குகின்றேன் பெரிய அசுரர்கள் அஞ்சும் படியான வல்லமையுடைவனே! வணங்குகின்றேன். பாரினில் ஜயவீரனாய் விளங்குபவனே! வணங்குகின்றேன்.

மலைமகளாகிய பார்வதியாள் பயந்த பாலனே! வணங்குகின்றேன். நாவல்லமையுடையவனே! மனதில் குடிகொள்பவனே! வணங்குகின்றேன். பாலகுமார சுவாமியே வணங்குகின்றேன், வணங்குகின்றேன்.

அழகிய கஜமுகத்தைக்கொண்ட விநாயகனுக்கு நேரான சகோதரனே! ஜடாபாரத்தில் கங்கையையுடைய சிவபிரானுக்கு அன்புடையவனே! ஒளிமயமானவனே! இலக்குமியின் மருகனே! ஈசனே! கடலைப்பகைத்து வேல்விட்ட சூரனே!

மாமறையின் உட்பொருளை உபதேசிக்க வல்லவனே! ஞானம் என்ற கிருபைக்கு இருப்பிடமானவனே! தேனொழுகும் கடப்பமாலையின் நறுமணம் பொருந்திய மார்பனே! பூரண சந்திரன்போல் விளங்கும் ஆறுமாமுகனே! முருகேசனே!

தவபுங்கவர்கள், தேவர்கள், முராரி (திருமால்), சிறந்த தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் பிரமாவுங்கூட துதிக்கும் படியான பெரியோனே! ஏழுலகங்கட்கும் மேலான நாயகனே, அழகு வேலாயுதா!

வானவர் ஊரான அமராபுரிக்கும், குபேரன் ஊரான அளகாபுரிக்கும் மேம்பட்ட இலக்குமி பொருந்திய சிறுவாபுரி வாழும் செல்வமே! தேவாதி தேவர்கட்குப் பெருமாளே! (பாலகுருசாமியே, அருள் தாராய்)!

குறிப்புரை: இந்தப் பாட்டில் 12 முறை "நமோ நம" என்ற வணக்கம் வந்துள்ளதைக் கூர்ந்து நோக்குக. சிதவாரிஜ பாதம் முதல் பன்னிரு கரங்களுக்கும் வந்தனை செலுத்துவது போல் அமைந்துள்ளது. "நமோ நம"என்ற வந்தனை வேதங்களிலும் ஸ்ரீ ருத்திரத்திலும் காணப்படுவதாகும்.

"நம" என்பது நமஸ்கரித்தல் என்று பொருள்படும். "நமோ நம" என்றால் பன்முறை நமஸ்கரித்தல் என்று பொருள்படும். "நாதவிந்துகலாதி" திருப்புகழையும் நினைவுகூர்க.

இப்பாட்டில் முருகப்பெருமான் வேதங்கட்கு அப்பாற் பட்டவன் என்றும், ஆகமங்கள் அண்ணிக்கும் சொரூபன் என்றும் பேசப்படுள்ளது.

"பாதகம் நீங்கிக் கதி தோய்தல்" என்பது மலபரிபாகம் சத்திநிபாதம் என்று சாத்திரங்கள் பேசும் உண்மை குறிப்பிடப் படுகிறது.

முருகன் 'ஞான மனோலன்' என்பது ஞானத்தால் சிந்தனையில் வழிபடுவார்க்கு லயப்படுபவன் என்று பொருள் தரும். அவன் ஞான தயாகரன் ஆகையினால் ஞானத்தைத் தரவல்லவன். அதனால் லயப்படுகிறவன்

சிறுவாபுரியில் சகளீகரித்துள்ள மூர்த்தியின் பெயரான ''பாலசுப்பிரமணியம்'' என்பது ''பாலகுமார சுவாமி'' என்று இப்பாட்டில் ஓதப்பட்டுள்ளதை உன்னி மகிழ்க.

சிறுவாபுரியில் அளகாபுரிக்கு மேலாகத் திரு (இலக்குமி) வாசஞ் செய்கிறாள் என்பதையும உன்னுக 'திரு' என்பது முருகனின் 'அருள்' என்றும சிரிய பொருள் கொள்ளத்தக்கது.

(3)

பிறவி யான சடமி றங்கி வழியி லாத துறை செறிந்து
பிணிக ளான துயரு ழன்று தடுமாறிப்
பெருகு தீய வினையி னொந்து கதிக டோறு
மலை பொ ருந்தி
பிடிப டாத ஜனன நம்பி யழியாதே!

நறைவி ழாத மலர்மு கந்த வரிய மோன வழிதி றந்த
நளின பாத மெனது சிந்தை யகலாதே !
நரர் சுராதி பரும்வ ணங்கு மினிய சேவை தனைவி
ரும்பி
நலன தாக அடிய னென்று பெறுவேனோ !

பொறிவ ழாத முநிவர் தங்கள் நெறிவ ழாத பிலனு ழன்று
பொருநி காச ரனைநி னைந்து வினைநாடிப்
பொருவி லாம லருள்பு ரிந்து மயிலி னேறி
[நொடியில் வந்து
புளக மேவ தமிழ்பு னைந்த முருகோனே !

சிறுவ ராகி யிருவ ரந்த கரிப தாதி கொடுபொ ருஞ் சொல்
சிலையி ராம னுடனெ திர்ந்து சமராடி
செயமதான நகர மர்ந்த அளகை போல வளமிகுந்த
சிறுவை மேவி வரமி குந்த பெருமாளே !

(உரை)

சந்தம் : தனன தான தனன தந்த தனன தான தனன தந்த
தனன தான தனன தந்த தனதான

பாடக்கூடிய ராகம் : காபிராகம்

பிரார்த்தனை : முருகா! உனது நளின பாதத்தை (திருவடியை) எனது சிந்தையில் வைக்கும் பேறு பெற வேண்டும்.

அரும்பதவுரை : சடம்—அறிவற்றது, கதி—பிறவி, பிடிபடாத ஜனனம்—பொய் வாழ்வு (உண்மை அறிய முடியாதது), நறை—தேன், நளின—அழகிய, சேவை—திருவடி, பொறி—இந்திரியங்கள், பிலன்—குகை சுனை, நிசாசரன்—இராக்கதன் பொருவிலாமல்— சடுதியில், சிறுவராகிய இருவர்—லவ குசர்கள், கரி—யானை, பதாதி—காலாட்படை, சிலை— வில்.

பொழிப்புரை : பிறவிக்குக் காரணமாகிய இத்தேகத்தில் ஈடுபட்டு, பிறவியைத் தடுக்க வழியில்லாத அறைகளில் நின்று பிறவித்துன்பத்தின் வேதனைப்பட்டு தடுமாற்றம அடைந்து, பிரவாகம் போல் பெருகும் கொடுவினைகளால் நொந்து, பிறவிகள் தோறும் இவ்வாறு அலைப்புண்டு, அநித்தியமான பிறப்பை மீண்டும் நாடி அடியேன் அழிந்து போகாமல்,

சகஸ்ராரத்திலிருந்து கசியும் அமிருதத்தை இருதய தாமரையில் இன்பம் எய்த அரிய மோன வழியைக் காட்டிய உனது தாள் தாமரையை எனது சிந்தையில் அகலாது இருக்க நரர்களும் சுரர்களும் உனது இனிமையான தரிசனத்தை விரும்பும் (உனது திருமுகத்தை) சதாகாலமும் தியானித்து சுகம் பெற அடியேன் என்று அருள் பெறுவேனோ !

ஐம்பொறிகளை அடக்க இந்நெறியினின்றும் பிறழாத நக்கீரரை குகையில் இருத்தி அழிக்க நினைத்திருந்த இராக்கத னின்றும் தப்பவழியை தினமும் நாடிய அந்நக்கீரருக்கு ஒப்பற்ற வகையில் அருள் புரிந்து, ஒரு நொடியில் மயில் மீதேறி வந்து மீட்டு அவர் புளகாங்கிதம் கொள்ளுமாறு காத்து அவர் தமிழால் பாடிய திருமுருகாற்றுப்படை எனும் மாலையை அணிந்து கொண்ட முருகோனே !

சிறுவர்களாகிய லவ குசர்கள் (ஸ்ரீ இராமரின் புதல்வர்கள்) அசுவமேதயாகத்தில் விடுத்த குதிரையை தடுக்க அதை மீட்க கஜரததுரகபதாதியுடன் வில் ஏந்திய ஸ்ரீஇராமபிரான் போருக்கு வந்த போது, அவரை எதிர்த்து வில்போர் புரிந்து வெற்றி கொண்ட நகரமான குபேரனது அளகாபுரி போல் வளமிகுந்த சிறுவாபுரியில் மேவி, மிகுந்த வரங்கள் அளிக்கும் முருகப் பெருமானே ! (உனது நளின பாதம் அடியேன் என்று பெறுவேனோ !)

குறிப்புரை : இப்பாட்டின் முற்பகுதியில் பிறவி தோறும் பிரவாகம் போல் வரும் இன்ப துன்பங்களினின்றும் விடுபட்டு மீண்டும் வாரா நெறியைக் கைக்கொண்டு சதாகாலமும் முருகப் பெருமானின் நளின பாதங்களை இருதயததில் சிந்தித்து மூலாதாரப் படியேறி சகஸ்ராரததிலிருந்து ஒழுகும் அமிர்ததாரையை சுவைத்துக் கொண்டு இருக்க அருள் வேண்டப்படுகிறது, நெறியல்லா நெறிதன்னில் புகுந்து பிறவித்துன்பத்தை நீக்கமுடியாது முருகனது சீர்பாதங்களை சிந்தையில் வைத்து அடியவனாய் நிற்கும் நெறியே பரமசுகத்தைத்தரும் என்று பெறப்படுகிறது.

பாட்டின் இரண்டம் பகுதியில் நக்கீரர் வரலாறு கூறப் படுகிறது. நக்கீரர் சிவபூசையில் ஒரு கண நேரம் தவறியதால் பெண் பூதத்தால் குகையில் தள்ளப்பட்டு அப்பூதத்துக்கு தானும் மற்றைய சிறைப்பட்ட முனிவர்களும் இரையாகாமல்

முருகப்பிரானல் காக்கப்பட்டு திருமுருகாற்றுப்படை பாடி உலகெலாம் அந்த மந்திர நூலால் உய்யுமபடி முருகன் திருவருள் பாலித்தது ஈண்டு பாடப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படையில் முருகனின் இயல்புகளும், வழிபாட்டு முறைமையும, அவனது அருள் விலாசமும் பேசப்பட்டுள்ளன. திரு அருணகிரியாரின் திருப்புகழ் வகுப்பு, முதலான பாடல்களில் அதன் சிறப்பு பேசப் படுகிறது. அது பாராயணத்துக்கு உரியது.

பாட்டின் மூன்ரும் பகுதியில் லவகுசர்கள் ஆற்றல் பேசப் பட்டு இத்தலத்துக்கு அமைந்துள்ள பெயரின் விளக்கமும் காணப்படுகிறது (சிறுவர் இருவர் அம்பெடுத்த ஊர் என்பது சிறுவரமபேடு அல்லது சின்னம்பேடு என்று மருவியது என்று முன்னம் காட்டினேம்.

(4)

வேலி ரண்டெனு நீள்விழி மாதர்கள்
காத லின்பொருள் மேவின பாதகர்
வீணில் வீண்டுள நாடிய ரூமைகள் விலைகூறி

வேளை யென்பதி லாவசை பேசியர்
வேசி யென்பவ ராமிசை மோகிகள்
மீது நெஞ்சழி யாசையி லேயுழல் சிறியேனும்

மால யன்பர னுரிமை யோர்முனி
வோர் புரந்தர னுதிய ரேதொழ
மாத வம்பெறு தாளிணை யேதின மறவாதே

வாழ்த ருஞ்சிவ போகந னூநெறி
யேவி ரும்பி வினவு டனே தொழ
வாழ்வ ரந்தரு வாயடி யேனிடர் களைவாயே

நீல சுந்தரி கோமளி யாமளி
நாட கம்பயில் நாரணி பூரணி
நீடு பஞ்சவி சூலினி மாலினி யுமைகாளி

நேயர் பங்கெழு மாதவி யாற்சிவ
காம சுந்தரி யேதரு பாலக
நீர் பொருஞ்சடை யாரருள் தேசிக முருகேச

ஆலில் நின்றுல கோர்நிலை யேபெற
மாநி லங்களெ லாநிலை யேதரு
ஆய னந் திரு வூரக மால் திரு மருகோனே

ஆட கம்பயில் கோபுர மாமதி
லால யம்பல வீதியு மேநிறை
வான தென் சிறு வாபுரி மேவிய பெருமாளே!

(உரை)

சந்தம் : தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன
தான தந்தன தானன தானன தனதான

பாடக்கூடிய ராகம் : பைரவி

பிரார்த்தனை : முருகா! சிவபோகந்தரும் நன்னெறியில் விரும்பி நடக்க இடர்வரின் களைவாய்!

அரும்பதவுரை : வேசி - பரத்தையர், மோகி — மயக்குபவர், புரந்தரன்—இந்திரன், நீலசுந்தரி—நீலமேனி வாலிழையாள், கோமளி—குமரி, யாமளி—காளி, நாடகம்—பவுரிக்கூத்து, நாரணி — வைஷ்ணவி, பஞ்சவி — பராசக்தி, சூலினி — திரிசூலம் படைத்தவள், மாலினி—கபாலங்களை மாலையாய் தரித்தவள், மாதவி—கன்னிகை. ஆலில் நின்று—பிரளயத்தில் திருமால் ஆலிலையிலிருந்து உலகைக் காத்ததால் அழியாமல் நின்றது, ஆயன்-இடையன் (கோபாலன்), ஊரகம்-காஞ்சி, ஆடகம்—பொன்.

பொழிப்புரை : வேல் இரண்டு என்று சொல்லத்தக்க நீண்ட விழிகளையுடைய மாதர்கள், காதல் காட்டிப் பொருள் ஈட்டும பாதகர்கள். வீணாக இகல் பேசியும், பேசாமலிருந்தும் வியாபாரம் செய்து, வேளை நேரமின்றி வசை பேசி, அலைக்கச் செய்யும் விலைமாதர் இவர்களிடம் மனம் கசிவாய்ப் பறிகொடுத்து அழிந்து உழலும் சிறியேனாகிய அடியேனும்,

திருமால். அயன், அரன். தேவர், முனிவர்கள், இந்திரன் முதலாயினோர் தொழும்படியான மகாதவத்தைப் பெறும் உனது இரண்டு திருவடிகளையும் நாளும் மறவாமல்,

வாழ்வாகிய சிவபோகத்தை விளைவிக்கும் அருள் நூல்கள் காட்டும் நன்னெறியையே விரும்பி வினயத்துடனே நின்னைத் தொழுது வாழ, வரம் தருவாய், அடியேனுடைய வருத்தங்களைக் களைவாய் !

நீல மேனியுடைய சுந்தரி, இளமை வாய்ந்தவள், பச்சை நிறத்தையுடையவள், இறைவனுடன் கூத்துப் பயிலும் நாரணி. நிரம்பிய மங்களத்தை உடையவள், பஞ்ச சக்தியாயினவள். திரிசூலத்தைத் தாங்கியவள், மாலையணிந்தவள், உமை, துர்க்கை. சிவபிரானின் பக்கலில் கொடிபோல் (குருக்கத்திக் கொடிபோல்) படர்ந்திருப்பவளான, சிவப்பிரியை தந்த பாலனும், கங்கை பெருகும் சடையார் அருளியவனுமான குருமூர்த்தியே, முருகேசனே !

ஆலிலையில் இருந்தபடியே உலகத்தவரை ரக்ஷிப்பவரும், ஆயர்குலத்தலைவருமான திருவூரகப் பெருமாளின் மருகோனே, பொன் மயமாக விளங்கும் கோபுரங்களும், பெரிய மதில்களும் உடைய ஆலயங்கள் பல நிரம்பியுள்ள வீதிகள் உள்ள சிறுவாபுரியில் வீற்றிருக்கும் பெருமாளே ! (வாழ வரந்தருவாய், அடியேன் இடர்களைவாயே!)

குறிப்புரை: இப்பாட்டில் இந்திரிய போகத்துக்காக மதியிழந்து உழலாமல் சிவபோகத்தை நுகர நன்னெறியை ஆராய்ந்து முருகனுடைய திருவடிகளைப் பற்றாகப் பற்றி உய்ய உபதேசிக்கப்படுகிறது. சிவகுமாரனின் பெற்றோர்களின் பெருமை அழகுபட ஓதப்படுகிறது. மேலும் மாமனாகிய திருமாலின் புகழும் பேசப்படுகிறது (பாலகுமார சுவாமி யாகையால் தேவிமார்களின் சிறப்பு ஈண்டு பேசப்படவில்லை) 'நேயர் பங்கெழு மாதவியாள்' என்று அம்மை போற்றப்படுவதால் அகத்தியர் பார்வதி கலியாணத்தைக் கயிலையில் பார்க்க இயலாது இறைவனருளால் தென்திசையில் எங்கெங்கும் அம்பாளை ஆனந்தவல்லியாகத் தரிசிக்கும் பேறு பெற்றார் என்பது புராணவரலாறு. சிறுவைக்கு அடுத்துள்ள வடக்கு நல்லூரில் எழுந்தருளிய சிவபிரானுக்கு திருவிளங்கப் பெருமான் என்ற திருநாமமும், அம்பாளுக்கு ஆநந்தவல்லி என்ற திருநாமமும் விளங்குகின்றன. சிறுவையில் எழுந்தருளிய திருமாலின் பெயர் திருவூரகப் பெருமாள் என்று இன்றும் நிலவுகிறது. மேலும் இப்பாட்டில் சிறுவையில் பல கோயில்களும், வீதிகளும், மதில்களும், இருந்தன என்று ஸ்ரீ அருணகிரிநாதர் பாடுகிறார். இன்றும் இந்த சிறிய கிராமத்தில் நெருக்கமாக சிவவிஷ்ணு ஆலயங்களும் இந்தப் பால சுப்பிரமணியர் ஆலயமும் உள்ளன.

இந்தப் பாட்டில் சிறுநெறியில் போகாமல் சிவபோகம் துய்ப்பிக்கும் நன்னெறியில் நம்மை ஈர்த்து வைத்து அருள் புரியவேண்டுமென்ற மகத்தான விண்ணப்பம் செய்யப்படுகிறது.

மூலமும் உரையும் முற்றிற்று.